**செய்தி வெளியீடு எண்: 578** **நாள் : 15.11.2015**

# இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2015 "தமிழ்நாடு நாள் விழாவை" இன்று (15.11.2015) மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

---

புதுடெல்லியில் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2015 "தமிழ்நாடு நாள் விழாவை" இன்று (15.11.2015) மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. 35–வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2015, நவம்பர் 14ஆம் தேதி தொடங்கப்பட்டு, வரும் 27ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இப்பொருட்காட்சியில் இந்தியாவில் உள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் 28 வெளிநாடுகள் பங்கேற்றுள்ளன.

ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் இப்பொருட்காட்சி தொடங்கப்பட்ட மறுதினமான இன்று (15.11.2015) தமிழ்நாடு தினம் கொண்டாடப்படுவது சிறப்புக்குரியதாகும்.

நடப்பாண்டில் இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் "இந்தியாவில் தயாரித்தல்" (Make in Inida) என்பதாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழ்நாட்டில் தொழில் துறை வியக்கத்தகு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் செப்டம்பர் 2015 திங்கள் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்வாயிலாக ரூ.2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடிக்கான முதலீடுகள் கிடைத்துள்ளன. இது 1991 முதல் 2011 வரையிலான 20 ஆண்டுகளில் கிடைத்த முதலீடுகளைப் போல இருமடங்கு ஆகும்.

2012–ல் வெளியிட்ட சூரிய மின்சக்திக் கொள்கையின் விளைவாக தமிழ்நாட்டில் சூரிய எரிசக்தி உற்பத்தித் துறையில் மட்டும் ரூ.35 ஆயிரத்து, 356 கோடிக்கான முதலீடு பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,345 மெகாவாட் மின்உற்பத்தி உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலக அளவில் உள்ள 10 வாகன உற்பத்தி தொழில் பெருமையங்களில் ஒன்றாகவும் தமிழகம் திகழ்கிறது. நாள் ஒன்றுக்கு 14 லட்சம் கார்கள், அதாவது நிடமித்துக்கு 3 கார்கள் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட நகரமாக சென்னை திகழ்கிறது.

இப்பொருட்காட்சியில், தொழில் முதலீட்டாளர்களின் முக்கியத் தேவையான போக்குவரத்து வசதி, சாலை கட்டமைப்பு வசதி, மின் வசதி, இட வசதி, மருத்துவ வசதி, தங்கும் வசதி போன்று அனைத்துத் துறைகளிலும் அளப்பரிய வளர்ச்சியை தமிழகம் கண்டுள்ளதைக் குறித்து ஆக்கப்பூர்வமாக விளக்கப்பட்டுள்ளது. தமிழகம் முதலீட்டாளர்களின் சொர்க்கமாகத் திகழ்கிறது.

தொழில் முதலீடுகளுக்குத் தேவையான தொழில் அனுமதிகள் விண்ணப்பித்த 30 நாட்களுக்குள், ஒற்றைச் சாளர முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழை எளிய மக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி, மக்கள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டங்களை பல்வேறு மாநிலங்களில் இருந்து வருகைதரும் மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரங்கு சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களின் நலனுக்காக தந்த சிறப்புத் திட்டங்களான விலையில்லா அரிசி, விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம், மேலும், மாணவ மாணவியருக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டம், பசுமை வீடுகள் மற்றும் அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம், அம்மா சிமெண்ட், அம்மா குழந்தைகள் நலப் பெட்டகம் போன்ற மக்கள் நலத்திட்டங்கள் சிறப்புற விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரங்கில் செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம், வேளாண்மைத் துறை, தமிழ்நாடு மாநில வேளாண்மை வணிக வாரியம், தமிழ்நாடு

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தமிழ்நாடு கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு கைவினை மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஆகிய **11** அரசுத் துறைகள் பங்கேற்று தங்கள் துறையின் சாதனைகள், திட்டங்கள் மற்றும் செயல்விளக்க மாதிரிகள் (Models) சிறப்பான முறையில் நேரடிக் காட்சியாக பொதுமக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர்.

இவ்வரங்குகளில், அரசின் சாதனை விளக்கப் படக்காட்சிகள் தொடர்ந்து ஒளிப்பரப்பட்டு வருகின்றது. மேலும், அரங்கிற்கு வருகைதரும் பார்வையாளர்களுக்கு அரங்கில் இடம்பெற்றுள்ள துறைகளின் சாதனைகள் குறித்த கையேடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினை கொண்டாடி வருகின்றனர். அவ்வகையில் “தமிழ்நாடு நாள்” விழா இன்று **(15.11.2015)** பிரகதி மைதானத்தில் உள்ள லால் சௌக் கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினை, மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்கள். புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஜஸ்பீர்சிங் பஜாஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. கு. தாணப்பா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள்.

இவ்விழாவில், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க பரதநாட்டிய நிகழ்ச்சியும், கிராமியக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் டெல்லியில் வசிக்கும் தமிழர்கள் உட்பட பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

முன்னதாக, அரங்கினை மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஜஸ்பீர்சிங் பஜாஜ், இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**